செ.வெ.எண். 43 நாள்.18.12.2017.

**திருநெல்வேலி மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் சிறுபான்மையினர் உரிமைகள் நாள் தின விழாவில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் 61 உலமாக்களுக்கு ரூ.3.10 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், 27 நபர்களுக்கு புதிய உலமாக்கள் அடையாள அட்டையினையும் வழங்கினார்.**

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம், சிறுபான்மையினர் உரிமைகள் நாள் தின விழா இன்று (18.12.2017) நடைபெற்றது. சிறுபான்மையினர் உரிமைகள் நாள் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு 61 உலமாக்களுக்கு ரூ.3.10 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், 27 உலமாக்களுக்கு புதிய அடையாள அட்டையினையும் வழங்கினார். விழாவில், சிறுபான்மையினர் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

சிறுபான்மையினர் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு சிறப்பு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. சிறுபான்மையினர் தங்களது பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதற்கு பல்வேறு சிறு மற்றும் பெரு கடனுதவிகளை வழங்கி வருகிறது. சிறுபான்மையினர் அனைத்து தரப்பினருக்கும் பள்ளி, கல்லூரி மற்றும் பட்டயம் மேற்படிப்பு பயில தேவையான அனைத்து கல்வி உதவித் தொகையினை அரசு வழங்கி வருகிறது. டாம்கோ மூலம் தொழில் தொடங்க கடனுதவிகள் வழங்கி வருகிறது. இன்று திருநெல்வேலி மாவட்டத்தில், மாவட்ட உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் கீழ் 27 உலமாக்களுக்கு புதிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 11 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ.1000/–வீதம் பெறுவதற்கான உத்தரவினையும், 50 சிறுபான்மையினர் பெண்களுக்கு ஓய்வூதிய உதவித் தொகை தலா ரூ.3 ஆயிரத்திற்கான காசேலைகளும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சிறுபான்மையினர் உலமாக்கள் அடையாள அட்டை பெறுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து தரப்பு சிறுபான்மைனயினர் மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு தேவையான கடனுதவிகளை வழங்கி வருகிறது. அரசு திட்டங்களை பெற்று கல்வியில் முன்னேற்றம் அடைந்து வாழ்க்கை தரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும் என பேசினார்.

இவ்விழாவில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ) திரு.மகேஸ்வரன், அரசு ஹாஜி திரு.முகமது கசாலி மற்றும் அரசு அலுவலர்கள், உலமாக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.